**STC .No. 16/2024**
**நாள் – 10.03.2026.**

பு.**சா.1 – திரு. முத்துமணி சாட்சி சத்தியப்பிரமாணத்தின் மூலம் அழைக்கப்பட்டு புகார்தாரர் தரப்பு குறுக்கு விசாரணை )**

**(எதிரி ஆஜரில்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளார்).**

நான் எந்த விலாசத்தில் வசித்து வருகிறேன் என்றால் புகாரில் சொல்லப்பட்டுள்ள முகவரியில் வசித்து வருகிறேன். நான் எட்டாம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு ஆங்கிலம் படிக்க தெரியாது. புகாரில் சொல்லப்பட்டுள்ள விவரங்கள் ஆங்கிலத்தில் சொல்லப்பட்டுள்ளது அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான் என்னுடைய வழக்கறிஞர் மூலம் தெரிந்து கொண்டேன் . எதிரியை ஒரு 10,20 வருடமாக தெரியும். யார் மூலம் தெரியும் என்றால் ஒட்டன்சத்திரம் தங்கவேல் மூலமாக தெரியும். தங்கவேல் பைனான்ஸ் தொழில் செய்கிறாரா என்றால் விவசாயம் செய்கிறார். எதிரிக்கு கடன் எங்கு வைத்து கொடுத்தேன் என்றால் ஒட்டன்சத்திரத்தில் தங்கவேல் முன்பாக கொடுத்தேன். நான் எதிரிக்கு கடன் கொடுக்கும் போது நான் மற்றும் எதிரி, தங்கவேல் ஆகிய மூவர் மட்டும் இருந்தோம். எதிரியின் முகவரி மற்றும் அவர் தங்கியிருக்கும் இடம் குறித்து தெரியாது என்றால் சரியல்ல. அவர் வீட்டிற்கு சென்றுள்ளேன். நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் விவசாயம் மற்றும் ரியல் எஸ்டேட் தொழில் செய்கிறேன். மாதவருமானம் எவ்வளவு என்றால் ரூ.50 ஆயீரத்திற்கு மேலே இருக்கும். நான் வருமான வரி செலுத்தி வருகிறேன். புகார் அறிவிப்பு பிரமான வாக்குமூலத்தில் நான் வருமானவரி செலுத்துவதாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எதிரிக்கு ரூ.5 இலட்சம் கடனாக கொடுத்தேன். 500 ரூபாய் தாள் பத்த கட்டு கொடுத்தேன். 10.01.2023 அன்று கொடுத்தேன். அன்றைய தினம் எதிரி காசோலை கொடுத்தாரா என்றால் இல்லை. 17.06.2023 அன்று காசோலை கொடுத்தார். காசோலை கொடுக்கும் போது எதிரி மற்றும் தங்கவேல் இருந்தார்கள். ஒட்டன்சத்திரத்தில் உள்ள ஒரு டீ கடை முன்பாக எதிரி

காசோலை கொடுத்தார். அந்த டீ கடை பெயர் தெரியாது. எதிரி ஒரே ஒரு காசோலையை கொடுத்தார். கடனுறுதி சீட்டு ஏதும் பெறவில்லை என்றால் சரிதான். இந்தியன் ஓவர் சீஸ் வங்கி ஒட்டன்சத்திரகிளை காசோலையை கொடுத்தார். எதிரி கையெழுத்து மட்டும் போட்டு காசோலை கொடுத்தார் என்றால் இல்லை. தங்கவேல் முன்பாக நிரப்பி கொடுத்தார். தங்கவேல் காசோலையை நிரப்பினார். எதிரிக்கும் எனக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றாலும் தங்கவேல் பைனான்ஸ் தொழில் செய்து வருகிறார் என்றாலும் தங்கவேலிடம் எதிரி ரூ.1,45,000/- கடனாக பெற்ற போது பொறுப்புறுதியாக வழக்கு காசோலை மற்றும் இரண்டு கடனுறுதி சீட்டு கொடுத்தார் என்றாலும் அந்த கடனை தங்கவேலிடம் திருப்பி செலுத்திவிட்டார் என்றாலும் மேற்படி பொறப்புறுதி ஆவணங்களை திருப்பி கேட்ட போது தங்கவேல் மற்றும் எதிரிக்கு வாக்குவாதம் ஏற்பட்டது என்றாலும் அதனால் தங்கவேலிடம் கொடுத்த காசோலையை என் மூலமாக தவறாக பயன்படுத்தி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றாலும் சரியல்ல. 23.06.2023 அன்று வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன். அறிவிப்பு மற்றும் வழக்கு தாக்கல் செய்வதற்கு இடையே நான் எதிரியை தொடர்பு கொண்டேனா என்றால் இல்லை. 03.01.2024 அன்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். காசோலையில் உள்ள கையொப்பம் மற்றும் நிரப்பப்பட்ட பகுதிகள் வெவ்வேறு மையாக உள்ளது என்றால் சரிதான். நான் சொன்னவாறு சொன்ன தேதியில் எதிரிக்கு கடன் கொடுக்கவில்லை என்றாலும் தங்கவேலிடமிருந்து காசோலையை பெற்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. எதிரி எனக்கு சட்டப்படி செலுத்தவேண்டிய தொகை ஏதும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யப்பட தக்கது என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் என்னால் பதிவு செய்யப்பட்டு நான் மொழிய தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு வாக்குமூலம் கொடுத்தவருக்கு எடுத்துக்காட்டி சரியென அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டது.

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

PACKIARAJ Digitally signed by PACKIARAJ Date: 2026.03.10 16:44:54 +0530

Judicial Magistrate No.I
Dindigul.